1422

Regd. No M 878.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்

இவைகளைப் பரவச்செய்யும்

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ் பத்திரிகை

தொகுதி 9 } காளயுக்திஹு மாசி / 1919ஹு பிப்ரவரி { பகுதி 10

5 - MAR 1924

விஷயங்கள்

1.	தத்சாவபிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர், பி. எ.	281
2.	பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர்	289
3.	மைசூர் பள்ளிக்கூடங்களில் மதப்பயிற்சி	293
4.	திருவனந்தபுரத்தில் புலையர் கூட்டம்	294
5.	இந்தியச்சாரணர் கைத்தொழிற் பெருங் காட்சி	296
6.	பிரஹ்மஞான சபையும் அதன் வேலையும்—எ. ரெங்க சாமி ஐயர், பி. எ. பி. எல்.	297
7.	ஸர் ரவீந்திரநாத டாகூர் உபந்நியாசம்—ஸபாபதி	302
8.	சிறுவர் பக்கம்—சொர்ணவேலன்	309
9.	பத்திரிகை விமர்சம்,	301
10.	புத்தகவிமர்சம்	311

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

நமது திருத்தப்பட்ட விளம்பர விகிதங்கள்.

	1 வருஷம்	9 மாதம்	6 மாதம்	3 மாதம்	1 மாதம்
1 பக்கம்	ரூ. 50	ரூ. 38	ரூ. 28	ரூ. 14½	ரூ. 5
¾ ஷை	ரூ. 38	ரூ. 28	ரூ. 20	ரூ. 11	ரூ. 4
½ ஷை	ரூ. 26	ரூ. 20	ரூ. 14	ரூ. 8	ரூ. 3
¼ ஷை	ரூ. 14	ரூ. 11	ரூ. 7½	ரூ. 4	ரூ. 1¾
1 இஞ்ச்	ரூ. 10	ரூ. 7½	ரூ. 5½	ரூ. 3	ரூ. 1

அடியிற்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்

முந்துங்கள்! **விலை சொற்பம்!**

1 ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொபஸர் ரெங்காச்சாரி 0—12—0
2 விக்கிரஹாராதனை-சம்பாவனை—கே. எஸ். ராமசந்திரய்யர் ... ... 0—1—0
3 மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்-வெங்கிட்டராமய்யர் ... ... 0—6—0
4 கல்வி கற்பித்தல்—ஈஸ்வர கைங்கரியம் ... 0—8—0
5 வைது பிரதிக்ஞை ... ... 0—12—0
6 பிரஹ்மஞானத்தின் விசாரத்தில் நமக்குள்ள பயன் யாது ... ... 0—9—0
7 நமது பெரும் துரவஸ்தை—இது நீங்கும்வழி 0—3—0
8 கர்மநாசம் ... ... 0—3—0
9 சின்னங்கள் ... ... 0—3—0
10 ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ... 0—3—0
11 ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ... 0—3—0
12 மோக்ஷம் அல்லது வீடுபேறல் ... 0—3—0
13 ஸ்தூல பிரபஞ்சதர்மங்கள்—ஆத்மதர்மங்கள் 0—3—0
14 என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது ... ... 0—3—0
15 மகாலயபக்ஷமும் நவராத்திரியும் ... 0—1—0
16 காயத்ரி ராமாயணம் ... ... 0—1—0
17 காயத்ரி ... ... 0—1—0
18 சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ... 0—2—0
19 ஹிந்து என்பவன் எவன் .... 0—1—0
20 லோககுருவின் அவதாரங்கள் ... ... 0—1—0
21 புத்த சரித்திரம் ... ... 0—0—6
22 தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள் ... 0—2—0

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 | காளயுக்தி௵ மாசி௴ 1919௵ பிப்பிரவரி௴ | பகுதி 10

தற்கால நிலைமை.

தஞ்சை நகரில் ஒரு மாணாக்கன் ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்குப் போகும்படி தலைமை யுபாத்தியாயரால் தேர்ந்தெடுக்கப்பட வில்லை யென்று ஏக்க முற்றுத்தன்னை மாய்த்துக் கொள்ள எண்ணங்கொண்டு நைட்ரிக் ஆஸிட் என்ற விஷத்தைச்சாப்பிட்டு விட்டானாம். அதன் வேகத்தையும் உஷ்ணத்தையும் தாங்க முடியாமல் காவேரியில் விழுந்து இறந்து போனானாம். இந்த சமாசாரத்தைப் பத்திரிகை மூலமாகப் படித்தோம். இவ்விதமான சமாசார மானது அபூர்வமானதாக இருந்தால் அதைப்பற்றி விசேஷமாகக் கவனிக்கவேண்டியதில்லை. ஒரு ஜீவன் அகாலமாகத் தற்கொலை புரிந்தானே என்ற வருத்தம் ஏற்படினும் அதைப் பற்றி வேறுவிதமாக சிந்தனை செய்ய நியாயம் இல்லை. ஆனால் இச்சமாசார மானது அபூர்வமான தல்ல. அடிக்கடி இதைப்போன்ற ஏனைய சமாசாரங்களைப் பத்திரிகை மூலமாய் அறிகிறோம். எத்தனையோ சம்பவங்கள் இதைப் போன்றவைகளை பத்திரிகையில் பிரசுரிக்கிறதில்லை. ஆனால் அவைகளைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோம். ஆகையால் ஏன் ஒரு வாலிபன் இவ்விதமாகத்தன் சரீரத்தை மாய்த்துக் கொண்டான என்றதைப்பற்றி சற்று ஆலோசிப்போம்.

தென் இந்தியாவில் விசேஷமாக பிராமணர்களில் மெட்ரிகுலேஷன் அல்லது ஸ்கூல் பைனல் என்ற பரீக்ஷையில் தேற வேண்டியது மிக்க இன்றியமையாத விஷயம் என்று கருதப்படுகின்றது. அந்தப் பரீக்ஷையில் தேருத பக்ஷத்தில் அப்பையன் ஒரு விதமான உத்யோகத்திற்கும் தகுதியற்றவன் என்று ஜனங்கள் நினைக்கிருர்கள். அத்துடன் அவ்வித வாலிபர்கள் மனதிலும் அத்துரெண்ணமானது பசுமரத்தாணி போல் பதிந்து விடுகிறது. மேலும் பெற்ருேர்களும் உபாத்திமார்களும் பள்ளிக்கூடப் பரீக்ஷைகளில் தேருத மாணுக்கர்களை மனது புண்படும்படியாக ஏசுவதும் வழக்கமாயிருக்கின்றது. ஆகையால் விசேஷமாய் ரோஷமுள்ள வாலிபனுதான் இவ்வுலகிலிருந்து பயனில்லை என்று ஏக்குற்று உயிரை மாய்க்கவாவது, ஊரைவிட்டு ஓடிப்போகவாவது பிரயத்தனப்படுகிருன். அப்படி ஏதாவது ஸம்பவம் நேரிட்டால் அதற்கு யார் உத்தரவாதம், மனது பக்குவமாகாத அந்தப்பையனு அல்லது அவனை அவ்விதம் செய்வதற்கு காரணபூதர்களான பெற்ருேரும் உபாத்திமாருமா? இவ்விதமான பொறுப்பை நன்குணர்ந்தால் அவர்கள் இவ்விதம் நடக்க மாட்டார்கள்.

***

பூர்வகர்ம பலத்தினுல் ஒவ்வொருவனுக்கும் சிற்சில துறைகளில் சாமர்த்தியம் ஏற்படுகின்றது. சிற்சில துறைகளில் பக்குவம் போதாமலும் இருக்கிறது. ஆங்கிலேயர்களில் விசேஷமான படிப்பில்லாமலே அநேகம்பேர்கள் பெரிய வேலைகளில் அமர்ந்து நல்ல சம்பளம் பெற்று வருவதையும் பார்க்கிருேம். அம்மாதிரியே இந்தியாவிலும் பரீக்ஷைகளில் தேருதபலர் கூட வெகு சாமர்த்தியசாலிகளாயிருக்கிருர்கள். ஸ்கூல்பைனல் பரீக்ஷை தேறவேண்டும் என்று நினைப்பது மதியீனமாகும். ஆகையால் வாலிபர்கள் மனதில் மேற்கண்ட பரீக்ஷைகளைத் தேருதபோனல் ஜன்மமே வியர்த்தம் என்று எண்ணம் தோன்ருதபடி பெற்ருேரும் உபாத்திமாரும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் அதற்குத் தகுதியற்றவர்கள் வேறு ஏதாவது வழியில் மிகவும் சாமர்த்தியசாலிகளா யிருப்பார்கள் என்பது நிச்சயம். அவ்வழி யெதுஎன்று தீர்மானித்து அதில் செல்லும்படி செய்வதுதான் பெற்றோருடையவும் உபாத்திமாருடையவும் கடமையாகும்.

***

அநேகமாய் நம்முடைய பையன்கள் பரீக்ஷைகளில் தேறாததற்குக் காரணம் இரண்டு ஆகும். முதற்பாஷையாகப் படிக்கும் ஆங்கிலத்தில் பயிற்சி போதாமல் அந்தவிஷயத்தில் தேறமுடியாததும், மற்ற விஷயங்களான கணக்கு சரித்திரம், பூகோள சாஸ்திரம் முதலிய விஷயங்களில் தேறமுடியாததும் காரணங்களாகும். புதிய பாஷையை நன்றாகப்படிப்பதும் அப்பாஷையிலேயே தம் எண்ணங்களை வெளிப்படுத்துவதும் சாதாரணமாக யாவராலும் முடியாததாகும். இந்தியர்தான் ஆங்கிலம் கற்பதில் சாமர்த்தியசாலிகள் என்று பேர்பெற்றவர்களானாலும், அவர்களில் கூடப் பெரும்பாலர்க்கு ஆங்கிலம் தேறுவது உண்மையில் சிரமசாத்தியமான காரியம். ஆகையால் நம் சிறுவர்களில் பெரும்பாலர் ஆங்கிலத்தில் தேற முடிகிறதில்லை. மேலும் மற்றபாடங்களையும் ஆங்கிலத்திலேயே கற்பிப்பதாலும் ஆங்கிலத்திலேயே மறுமொழி கூறவேண்டியதாயிருப்பதாலும், அவைகளிலும் தேர்ச்சிபெறுவதும், அவ்வாறு தேர்ந்தாலும் உணர்ந்ததை வெளியிடுவதும் முடியாத காரிய மாகிறது. ஆகையால் இருவிதத்திலும் நமது மாணக்கர்களில் வெகு சிலரே பரீக்ஷைகளில் தேறுகிறார்கள். மற்ற பெரும்பாலரை நாம் உபயோக மற்றவர்கள் என்று தள்ளி விடுகிறோம். அதுதான் மிக மதியீனம். அவர்களை மட்டும் தாய் பாஷையில் பயிற்றுவித்தால் ஒவ்வொருவரும் பற்பல விஷயங்களில் தேர்ச்சிபெற்றவராவார் என்பது திண்ணம். ஆகையால் நமது வித்யாமுறை பிசகு என்பதும், அதற்கு உத்தரவாதமாகிய நாமுள்பட எல்லா ஜனங்களும் மேற் கூறிய விபத்துக்குப் பொறுப்பாளிகள் என்பதும் விசதமாகிறது.

ஆகையால் தேசியக்கல்விமுறையை ஆதரித்து தேசபாஷைகளில் படிப்பைப் பரவச்செய்து ஒவ்வொரு மாணுக்கனும் தன்னால் கூடிய வழியில் தனக்கு ஏற்ற விஷயத்தில் தேர்ச்சி பெறும்படிசெய்தல் நம்மைப்போன்ற ஒவ்வொருவர் கடமையென்றும் விளங்கவில்லையா?

***

பரீக்ஷையில் தேறவில்லையென்று உயிரை மாய்க்கிறவர்களை இந்த தேசத்தில் தான் பார்க்க முடியுமேயொழிய மற்ற ஒரு தேசத்திலும் காணமுடியாது. இதர தேசங்களில் மாணுக்கர்கள் உற்சாக சீலர்களாயும் நாம் எக்காரியத்தையும் சாதிக்கவல்லோம் என்ற நம்பிக்கையுள்ளவர்களாயும் காணப்படுகிறார்கள். ஆனால் இங்கேயோ மாணுக்கர்கள் பயந்து, நடுநடுங்குகிறவர்களாயும், சரீரத்தில் பலமற்றவர்களாயும் பரீக்ஷையைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் சிம்ம சொப்பனம் கண்ட யானையைப் போன்றவர்களாயும் காணப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் காரணம் நமது கல்வி முறையே. அதை மாற்றினால் ஒழிய நம்முடைய வாலிபர் கதி அதோகதிதான். ஆகையால் நாம் எல்லோரும் தேசிய வித்தையை ஆதரிப்போமாக.

***

கர்னல் ஆல்காட்டை சேரில்காணும் பாக்கியம் பெற்றவர்கள் அவரை எளிதில் மறக்கமாட்டார்கள். ஹிந்து வாலிபர்களுக்குத் தமது உயர்ந்த மதத்தில் பற்றையுண்டுபண்ணினவர்களில் முதன்மையானவர் இவர் என்றே சொல்லவேண்டும். இந்தியா முழுவதும் அலைந்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சென்று உபந்யாசங்கள் செய்து ஆங்காங்கு ஆரியபால ஸமாஜங்களை ஸ்தாபித்ததும் அவ்வாலிபர்களுக்கென்று ஆரியபால போதினி என்ற மாதாந்தர அங்கிலப்பத்திரிகையை நடத்திவந்ததும் அனேகர் மனதில் ஞாபகத்திற்கு வரலாம். சிங்களத்தில் பௌத்தர்கள் தங்கள் மதத்தில் பற்றில்லாமல் பௌத்தர்கள் என்று சொல்வதற்குக்கூட அவமான மடைந்தவர்களாய் இருந்தபோது

அவர்களுடைய மதத்தின் கௌரவத்தை உணரும்படிக்கும் அதைப்போற்றும் படிக்கும் செய்து அவ்வாலிபர்களுக்குக்கல்வியையும் பயிற்சியையும் போதிப்பதற்காக பௌத்த மதக் கல்லூரிகளை ஸிலோனில் ஸ்தாபித்ததும் இம்மகானுபாவனே. மேலும் சென்னையில் கீழ்ஜாதியார் என்றும், தள்ளுண்ட ஜாதியார் என்றும் இகழப்பட்ட பறையர், பள்ளர், முதலியவர்களுக்குக்கல்வி புகட்டினாலல்லாது அவர்களை உயர்த்த முடியாதென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டு அவர்களுக்காக அடையாற்றில் பள்ளிகளை ஸ்தாபித்தவரும் இவ்வுத்தமனே. ஆகையால் 1907ஹு பிப்ரவரிமீ 17உயன்று இவர் உடலை நீத்துத்தன் குருநாதர் பக்கம் சென்றபோது உலகத்தில் உள்ள மதத்தார் யாவரும் இவரது பிரிவை ஆற்றாமல் இரங்கினார்கள்.

***

1847ஹு பிப்ரவரிமீ 17உயில் சார்லஸ் லெட்பீட்டர் பிறந்தார். அவரை நம்மில் அனேகர் நேரில் பார்த்திருக்கலாம். 70வயதுக்குமேற் சென்றவரானாலும் அவரது அகண்ட மார்பும், பரந்த முகமும், எப்போதும் கருணையுடன் சேர்ந்த பார்வையும் யாவருடைய மனத்தையும் கவர்ந்தன. குழந்தைகளைக்கண்டால் அவருக்கு அளவிலா ஆனந்தம். நமது தலைவரான மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையார் இவ்வுத்தமனைப் பற்றிக் கூறுகிறதாவது: இளம் பிராயம்முதல் முதிர்ந்த வயதில் குரூரமாக இவரை அவதூறுகூறித்தூஷித்த காலம்வரை இவருடைய காலமானது கஷ்டமானதாக இருந்திருக்கின்றது, இவரோ ஆச்சரியகரமானபடி அவ்வளவு பரிசுத்தமானவர். ஒரு காலத்திலாவது அஸங்கிடமான வார்த்தையை யாவது அசுத்தமான எண்ணத்தைக் காட்டக்கூடிய வார்த்தையையாவது இவர் உச்சரித்தது கூடக்கிடையாதென்று அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். உதவி வேண்டியவர்களுக்கு எப்போதும் உதவி செய்திருக்கிறார். எவ்வளவு குரூரமாயும் அநியாயமாயும் தூஷிக்கப்பட்ட காலத்திலும் கலங்காத அமைதியும் நிர்மலமான சித்தத்

தையும் உடையவர். அவரைத்தப்பர்த்தம் பண்ணிவைதா லும் அப்படிப்பட்டவர்களைப்பற்றி பொறுமையாயும் அன் பாயும் தான் பேசுவார். அவருக்குக் கொடும் தீங்கிழைத் தவர்களுக்கு மாருக, மாருத அன்பையும் பொறுமையையு மே காட்டுவார். அபராதத்தை க்ஷமிப்பதில் இவரைப்போன் றவரைப்பார்க்க முடியாது. பாபிகளிடத்தும் துஷ்கிருத்தி யம் செய்பவரிடத்திலும் கரையில்லாக்கருணை காட்டும் சீல த்தையுடையவர். சார்லஸ் லெட் பீட்டரைப்போல் அவ்வ ளவு கிறிஸ்து தர்மத்தைக்காட்டிய மானிடர் ஒருவரையும் நான் எங்குங்கண்ட தில்லை. இவ்வுலகம் அவரைப்பழித் தது. ஏன் எனில், அவரைப்போற்றக்கூடிய யோக்கியதை உலகிற்கில்லை.

***

ஸ்ரீமான் ஹி. ஜினராஜதாஸர் சொல்லுகிறபடி இவரி டத்தில் இரண்டு சிறந்த குணங்களைக்காணலாம். முத லாவது தன் குரு தேவனுடைய காரியத்தைச் செய்வதில் தன்னை முற்றிலும் மறத்தல். இரண்டாவது ஞானத்தைத் தேடுவதில் சாஸ்திர யுக்தமான ஆராய்ச்சி செய்தல், முத ற்கூறியதைப்பற்றி விரிவாக இங்குக்கூறுதல் முடியாதெ ன்றும், அவருடன் நேரில் நெருங்கிப் பழகியவர்க்குத்தான் அதை யுணரமுடியும் என்றும் ஸ்ரீமான் ஜினராஜதாஸர் கூறுகிறார். ஆனல் இரண்டாவதாகக் கூறியுள்ள சாஸ்திர ரீதியை யனுஸரித்த ஆராய்ச்சியைப்பற்றி அவரது புஸ்த கங்களைப்படித்த ஒவ்வொருவரும் நன்கு அறிவார்கள். ஆனல் அவரது புஸ்தகங்களில்வெகுசிலவே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதால், தமிழ் மட்டும் அறிந்தவர்கள் அவரது வழியை நேரில் அறிய முடியாதென்பது விசனத் திற் கிடமானது. கூடிய சீக்கிரத்தில் அவரது அரிய நூல் களைத்தமிழ்ப் படுத்தித் தமிழரும் அவைகளைப் படித்துக் கிருதார்த்த மாகும்படி செய்ய ஒரு சிலராவது முன்வருவா ர் என்று எண்ணுகிறோம்.

***

இதுகாறும் உலகத்தில் தோன்றிய குரு தேவர்கள் லோககுருக்கள், எல்லோரும் உபதேச ரூபமாகவே தத்துவங்களை உணர்த்தியிருக்கிறார்கள். ஈசுவரனுடைய உத்தேசம் தான் விகாஸமுறை. தாம் அபரோக்ஷமாய் அறிந்த ஈசுவரநியதியை குரு தேவர்கள் ஒரு தத்துவ சாஸ்திர ரூபமாகவாவது உபதேச ரூபமாகவாவது தான் உணர்த்தி வந்திருக்கிறார்கள். ஆனால் இக்காலத்தில பௌதிக சாஸ்திரங்களில் எவ்வாறு ஆராய்ச்சி செய்து வஸ்துவின் ஸ்வரூபமென்ன அதன் அங்கங்கள் என்ன, எந்த எந்த ஸம்ஸ்காரங்களால் அந்த வஸ்துவானது எவ்விதமான மாறுதல்களை யடைகிறது, என்று ஸூக்ஷ்மதரிசிக்கருவிகளால பார்க்கப்படுகிறதோ அம்மாதிரியே, மேல்லோகங்களில் உள்ள திரவியங்கள, அத்திரவியங்கள் அடையும் மாறுதல்கள், முதலியவைகளை உள்ளபடி ஜனங்களுக்கு முறகாலத்திய கிரந்தங்களில் வெளியாக்கவில்லை. முறகாலத்திலும் மேற்கூறியவைகளை சூக்ஷ்மதிருஷ்டியால் பார்க்கக்கூடியவர்கள இருந்திருக்கின்றார்கள் என்று தெரியவருகிறது. இருந்த போதிலும் புவர்லோக முதலிய லோகங்களைபபற்றிய விஷயங்களைக் கூறுவதாகப் பிரவிருத்தித்த கருடபுராணாதிகளிலும் கூட உதாதிரண் ரூபமாயும் உவமைரூபமாயும அந்த லோக சம்பவங்களைப்பறறிக் கூறியிருக்கிறதேயொழிய, உள்ளபடி அந்தலோக திரவ்யத்தைப்பற்றி விளக்கப்படவில்லை. ஏன என்றால் லோகமானது அவ்விதமாகக் கூறினாலும் அதை அறியக் கூடிய பக்குவத்துக்கு வரவில்லை.

***

இப்போது ஸ்ரீமான் லெட் பீட்டருடைய விசேஷப் பெருமை என்னவெனில், பூமண்டலத்தில் ஒரு தேசம் அல்லது நகரத்தில உள்ள மலை, நதி, ஏரி, மேடு, பள்ளம் முதலியவைகளை உள்ளபடி எவ்விதம் கூற முடியுமோ, அம்மாதிரியே புவர்லோகாதிகளில் உள்ள சங்கதிகளைத் தன்சூக்ஷ்மதிருஷ்டியால்பார்த்து, பூகோள

சாஸ்திரம் முதலியவைகளில் கூறுவதுபோல் இவர் வரைந்துள்ள புஸ்தகங்களில் கூறியுள்ளார். அவைகள் மனதிற்கு கிராஹ்யமாயும நம்முடைய இயற்கையறிவுக்கும் பொருத்தமாயுமிருக்கின்றன. மேலும் அந்த விவரத்தை வைத்துக்கொண்டு பழைய சாஸ்திரங்களில் கூறியவற்றை அர்த்தம் பண்ணிக்கொண்டால் அவைகளும் நன்கு பொருள்படுகின்றன. மேலும் எப்படி பௌதிக சாஸ்திரிகள் கண்ட விவரங்களை உள்ளபடி கூறுவதையே நோக்கமாகக்கொண்டு அலங்காரம், உத்பிரேக்ஷை முதலிய சொல்லணி பொருளணிகளை உபயோகப்படுத்துகிறதில்லையோ அவ்வாறே இவரும் ஸ்வபாவத்தையே அழகாகக் கூறுவதில் சமர்த்தர். இவ்விதமான கிரந்தங்களினால் பிரஹ்மஞான சபை அங்கத்தினர் புவர்ஸுவர் லோகங்களின விபரத்தை அறியமுடிகிறது. மேலும் சித்திரபுத்திரன் கணக்குவைப்பதாக நாம் எல்லோரும குழந்தை முதல் கேட்டிருக்கிறோம் நாம் எண்ணும் எண்ணங்களும் கொள்ளும் ஆசைகளும், செய்யும் செய்கைகளும் அப்போதே மறைவனபோல தோன்றினும் உண்மையில் ஆகாசாதி திரவியத்தில் அவைகள் எப்போதும் தங்கியிருக்கின்றன. ஆகையால் சூக்ஷ்மதிருஷ்டியுள்ள ஒருவன சென்றகாலத்தில் நடந்த சம்பவங்களை அறியக்கூடும். அவ்விதமாக ஸ்ரீமான் லெட் பீட்டர் புராதன சம்பவங்களை அறிந்து கூறியிருக்கிறார்.

***

ஆகையால் பிப்பிரவரிமீ 7உ யை பிரஹ்மஞான சபையில் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீமான் லெட பீட்டர் தற்போது ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். அவர் வெகுகாலம் திடகாத்திரராய் ஜீவித்திருப்பாராக.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்.)

அத்தியாயம் 40.

எண்ணத்தின் சக்தி.

முந்தின அத்தியாயத்தில் பூலோகத்தில் ஜீவனுடைய நூதன வாழ்க்கைக்கு ஆதாரமான சில காரணங்களை நாம் கற்றுக்கொண்டோம், ஆனால் இவைகளில் ஒன்றுவது எண்ணத்தைப்போல் அவ்வளவு முக்கியமானதும் முடிவில் வெகு சாதகமுள்ளதுமல்ல. மனிதன் நினைத்துப் பார்க்கிறவன்; இந்த நினைப்பு அல்லது எண்ணத்தின் சக்தியினால் தான் அவன் மிருகத்திலிருந்து உயர்த்தப்பட்டு மனிதனாக ஆயிருக்கிறான்; மனிதன் தன் மனதில் எவ்விதம் எண்ணுகிறானோ அவ்விதமாகிறான் என்று கிறிஸ்து வேதப் புஸ்தகத்திற் சொல்லியிருக்கிறது; அவன் நடந்துகொள்வதற்குத் தக்கபடி ஆகிறதில்லை ஆனால் அவன் எண்ணத்துக்குத் தக்கபடி ஆகிறான்.

ஒரு மனிதனுடைய எண்ணங்கள் அவனுடைய உண்மையான ஸ்வபாவத்தை வெளிப்படுத்துகின்றன. அவனுடைய வருங்கால நிலைமையை அமைப்பதில் எண்ணங்களைப்போல் அவ்வளவு சக்தியுள்ளது வேறொன்றும் கிடையாது.

எண்ணத்தினாலே ஆசையும் செய்கையும் தூண்டப்படுகின்றன. அல்லது அடக்கவும் தடுக்கவும் படுகின்றன. ஏனெனில் மானச சரீரமானது இச்சா சரீரத்தைவிட மேலானதும் நேர்த்தியானதுமாயிருப்பதுடன் ஸ்தூல சரீரத்தை விட அதிக மேன்மையானதென்பது உனக்குத் தெரிந்த விஷயம். 2

நம்முடைய எண்ணங்களுக்குத் தக்கபடி நமக்கு சிநேகிதர்கள் அமைகிறார்கள். உனக்கு சிநேகமாயிருக்கிறவர்களை உற்றுநோக்கி அவர்களுடைய ஸ்வபாவங்களைக் கவனி. இதற்கு முன் நீ எவ்வித எண்ணங்களை அப்பியசித்து வந்தாயென்பது உனக்கே நன்கு விளங்கும்.

நன்மையும் நாகரீகமும் அழகுமுள்ளவைகளை நேசிக்தும் சிநேகிதர்கள் அல்லது தோழர்கள் உனக்கு இருக்கிறார்களா? அப்படி இருந்தால் அழகுள்ளதும் நேர்த்தியானதும் நாகரீகமுள்ளதுமான எண்ணங்களையே அப்பியசித்து வந்திருக்கிறாய். தினசரி வேலையில் உன்னுடன் சம்பந்தப்படுகிற ஜனங்களும் நீ தற்செயலாய் சந்திக்கும் ஜனங்களும் அசங்கியமான வார்த்தைகளையும் பரிகாசமுள்ள வார்த்தைகளையும் பேசுவதில் ஆசக்தியுடையவர்களாயிருந்தால், இதற்குமுன் நீ இவ்வித எண்ணங்களையே எண்ணியும் அதில் ஆனந்தப்பட்டவனாயுமிருந்திருப்பாய். ஆகையால் தான் அவ்வித நடத்தையுள்ள ஜனங்களுக்கும் உனக்கும் சம்பந்தமேற்படுகிறது. இவ்வித எண்ணங்கள் இப்போது உனக்கு அருவருப்பாயிருந்தாலும் கூட கர்மவசத்தால் நீ அவர்களை விட்டுத் தப்ப முடியவில்லை.

எண்ணத்தின் ஆகர்ஷண சக்தியைப்பற்றி உனக்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். சமானமானவைள ஒன்று மற்றொன்றை இழுக்கின்றன. நன்றாய்ப்படித்த நாகரீகமுள்ள ஒரு பையன் அல்லது ஸ்திரீ ஒரு அயோக்கியனால் அநீதியாய் நடத்தப்படுகிறான்— அதாவது அவதூறாய் பேசப்பட்டும், பொருள் அபகரிக்கப் பட்டும், பரிகாசத்துக்கு உட்படுத்தப்பட்டும் இருக்கிறான். ஆனால் அந்த நாகரீகமுள்ள மனிதன் நியாயஸ்தலத்தில் தனக்கு நேரிட்ட அவமானத்தை ருசுப்படுத்தி நியாயம்பெற சக்தியற்றவனாயிருப்பதாக வைத்துக்கொள்வோம். மேலே சொன்ன பையன், பெண், மனிதன் அல்லது ஸ்திரீ தன்னை அவமா

னம் செய்த அயோக்கியனுக்குச் சமானமாய் தானும் தெருவில் நின்று அசங்கியமான வார்த்தைகளைச் சொல்லி அவனைத் திட்டவாவது அவன் பேரில் பாய்ந்து அவனை யடிக்கவாவது இஷ்டப்பட மாட்டார்கள். ஆனால் ஒரு இடத்தில் உட்கார்ந்து வெளிக்கு சாந்தமுள்ளவர்கள் போலிருந்தாலும் மனதில் தங்களுக்கு அவமானம் செய்தவனைப் பழிதீர்க்க வேணுமென்ற பூர்ண எண்ணத்துடன் தங்களுக்கு நேர்ந்தது போல் தங்கள் எதிரிக்கு சம்பவிக்க வேண்டுமென்றும், அதனால் அவன் தீராத் துன்பமடைந்தும் மற்றவர்களால் தாழ்மைப் படுத்தப்பட்டும் இகழ்ச்சி யடைந்தும் தண்டனைப்பட்டு மிருப்பதாக உருவகப்படுத்தி இடைவிடாமல் பலமாய் எண்ணுவதுடன் இவ்வித எண்ணங்களில் சந்தோஷமுமடைகிறார்கள்.

வாய்விட்டுப் பேசப்படாத இவ்வித குரூர எண்ணங்களெல்லாம் மானஸீக திரவியத்தால் அமைக்கப்பட்ட நிஜமான உருவங்களாம். அவைகள் நினைக்கிறவனுடைய மூளையிலிருந்து வேகமாய்க் கிளம்பி குறிப்பிட்ட விரோதியின் பேரில் நோக்கப்பாய்ந்து அவனை முன்னிலும் அதிகக்கெட்டவனாக்கும்— அதாவது அதிக அயோக்கியனாகவும், நீதியற்றவனாகவும், துர்பாஷையை உபயோகிப்பதில் வெகு நிபுணனாகவும் செய்யும். இது மாத்திரமல்ல.

இவைகள் யார்பேரில் பிரயோகிக்கப் படுகின்றனவோ, அவன் இவ்வித எண்ணங்களால் நிறைந்தவனா யிருந்தால் இந்த நூதன எண்ணங்களை வாங்கிக் கொள்ளுவதற்கு இடமிருக்க மாட்டாது. ஆகையால் இவைகள் அவனை முன்னிலும் அதிகக் கெட்டவனாகச் செய்துவிட்டு சுயேச்சையாய் பலவிடங்களில் பாவி, இதற்கனுகுணமாய் கோபம் கொண்டிருக்கிற வேறொருவனைத் தாக்கும், அவன் படிப்பில்லாதவனாகவும் அடக்க முடியாத மனதை யுடையவனாகவும், கெடுதலாய் நடத்தப் பட்டவனாகவு மிருந்தால்,

இவைகள் அவன் மனதில் பாய்ந்து அவனுக்குக் கோபாவேச முண்டுபண்ணி, அந்த மூர்க்கத்தில் அவன் வேறொருவனை யடித்துக்கொலையும் செய்துவிடுவான். இந்தக் கொலைக்கு யார் பாத்தியமென்று நீ நினைக்கிறாய்? அடித்துக் கொன்றவனுடைய ஸ்தூல சரீரம் தூக்கில் போடப்பட்டு அழிந்து போனாலும்கூட இவ்வித எண்ணங்களை உருவகப்படுத்தி வெளியேற்றி விட்டவன்தான் நிஜமான குற்றவாளி. இந்தக் குற்றத்திற்காக இவன் அடுத்த ஜன்மங்களில் முன் சொன்னபடி கொலை செய்தவனுக்கு பரிகாரம் செய்யக் கடமைப்படுவான்.

நம்முடைய எண்ணங்களால் பாதிக்கப் படுகிறவர்கள் அடுத்த ஜன்மங்களில் நமக்கு சினேகிதர்களாக வாவது விரோதிகளாகவாவது' வந்து சேருவார்கள். ஒரு ஜன்மத்தில் சௌகரியப்படா விட்டாலும் இன்னொரு ஜன்மத்திலாவது நிச்சயமாய் வருவார்கள்.

வி. வெங்குசாமி ஐயர்

நன்மொழி.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

ஓம்பினேன் கூட்டைவாளா வுள்ளத்தோர் கொடுமைவைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூ ருடையகோவே.

அப்பர் சுவாமிகள்.

மைசூர் பள்ளிக்கூடங்களில் மதப்பயிற்சி.

1919ஹு பிப்பிரவரிமீ 28உயன்று பங்களூர் கோட்டையில் பிரஹ்மஞான சபையில் நடந்த போது ஜனக்கூட்டத்தில் ஸ்ரீமான் அட்வோகேட் கே. சங்கரநாராயண ராவ் அக்கிராசனம் வகித்தார். பிரஹ்மஸ்ரீ கே. நரஹரி சாஸ்திரியார் துவக்கத்தில் பேசிய பிறகு ஜஸ்டிஸ் சந்திர சேகர ஐயர் மனைவியார் ஸ்ரீமதி பார்வதியம்மாள், ஸ்ரீமதி ரங்கம்மாள், ஸ்ரீமான்கள் ராமையர், வி. வெங்கடராமையர், ஆர். கோபாலசாமி ஐயர், பி. ராமையர், நரசிம்மையர் முதலிய சிலரும் பேசினார்கள். கடைசியில் அடியில்கண்ட தீர்மானங்களை ஏகோபித்து அங்கீகரித்தார்கள்.

மைசூரில் விசுவ வித்யாலயத்தில் ஸமயபரீக்ஷை ஒன்று ஸ்தாபிக்கவும் ஸகல ஸமயங்களையும் ஒத்துப்பரீக்ஷை செய்து படிப்பதற்காக ஒரு ஸமய போதகக் கல்லூரியை ஸ்தாபிக்கவும் வேண்டுமென்று மைசூர் ராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்கலாயிற்று. மைசூரில் உள்ள போதகாசிரியர் பயிற்சிப்பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் மாணுக்கர்களுக்கு மதபோதனை செய்ய உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட இரண்டு தீர்மானங்களையும் நிறை வேற்றுவதற்கு வேண்டிய இதர தீர்மானங்களும் அங்கீகரிக்கப்பட்டன. மைசூர் அரசாங்கத்தார் மேற்கண்ட தீர்மானங்களில் கண்டபடி மதப்பயிற்சியை அவசியம் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்வார்கள் என்றும் அப்படிச்செய்து மற்ற இந்திய சமஸ்தானங்களுக்கும் பிரிடிஷ் இந்திய அரசாட்சிக்கும் வழிகாட்டி யாவார்கள் என்றும் நம்புகிறோம்.

திருவனந்தபுரத்தில் புலையர்கள் கூட்டம்

சென்ற நான்கு வருஷங்களாக நடந்து வரும் வழக்கத்தை அனுசரித்து இவ்வருஷமும் திருவனந்தபுரம் ஜனங்களின் வருஷக்கூட்டத்திற்குப் பிறகு விக்டோரியா ஜூபிலி நகர மண்டபத்தில் புலையர்கள் கூட்டம் கூடிற்று.

திவான் கிருஷ்ண நாயர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். புலையர்கள் தான் எல்லா ஜாதியாருக்கும் கீழ்ப்பட்டவர்கள் என்று கருதப்படுகின்றனர். அந்தக்கூட்டத்தை மேல் ஜாதியார் அநேகர் வந்து அலங்கரித்தார்கள். முதன் முதலாக ஸ்ரீ மகாதேவ ஐயர் அவர்களும் அப்பால் ஸ்ரீ பரமேஸ்வரன்பிள்ளை யவர்களும் பேசினார்கள். 15 வருஷங்களுக்கு முன்னால் இவ்விதக்கூட்டம் கூடும் என்றும் அக்கூட்டத்தில் மேல் ஜாதியார்கூட வந்திருப்பார்கள் என்றும் யாராவது சொன்னால் அதை ஒருவரும் நம்பமாட்டார்கள். திவானவர்கள் கூறிய முடிவு உரையானது மிகவும் கவனிக்கத் தக்கது.

திவான் அவர்கள் முடிவுரை.

சர்க்கார் உத்திரவில் கூறியபடி புலையர்களுக்கு நிலங்களைக் கொடுத்து அவர்களை நிலஸ்வான்தாராக்கவில்லையென்று ஒருவர் ஜனங்களின் வருஷக்கூட்டத்தில் குறை கூறினார். அது சுத்தப்பிசகு. கொல்லம் மாகாணத்தில் 5,000 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலங்களை புலையர்களுக்கென்று சென்ற 16 மாதங்களுக்குள் கொடுத்து அவர்கள் பேருக்கே பட்டாக்களும் கொடுத்திருக்கிறோம். சர்க்கார் கொடுத்த வாக்கு தானமானது ஒருக்காலும் பொய்யாகமாட்டாது. புலையர்களைப் போல் அவ்வளவு உழைப்பாளிகளான ஒரு ஜாதியார் படிப்பில்லாமலும் தனமில்லா

மலும் இருப்பது சர்க்காருக்கே நஷ்ட ஹேதுவாகும். ஆகையால் உங்களை முன்னேற்ற மடையும்படி செய்தலை சர்க்கார் தம் கடனாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏழைகள் என்பது உண்மை. ஆகையால் நீங்கள் கோர்ட்டுகளுக்குப் போவதை தவிர்க்க வேண்டும். சென்ற சில வருஷங்களுக்குள் ஏராளமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உங்கள் சிறுவர் சிறுமியரில் பெரும்பாலர் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து படிக்கின்றனர். 15 வருஷங்களுக்கு முன்னர் பள்ளிக் கூடத்திற்குள் ஒரு புலையப்பையன் அடி வைக்க முடியுமென்று கனவிலும் எண்ண முடியாது. முதன் முதலாக புலையச் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு பலமான ஆக்ஷேபணைகள் நிகழ்ந்தன. ஆனால் வர வர அவ்வாக்ஷேபணைகள் ஒய்ந்து விட்டன. சமஸ்தானப் பள்ளிகளில் பெரும் பான்மையில் புலையப்பையன்களும் சிறுமிகளும் சேர்ந்து படிக்கலாம். சுமார் 20,000 புலையச்சிறுவர் சிறுமியர் திருவாங்கூர் ராஜ்யத்திற்குள் பள்ளிகளில் படிக்கின்றனர். முன் காலத்தில் புலையர்கள் நிலத்தை உழும் அடிமைகளாய்க் கருதப்பட்டனர். இப்போது அவர்கள் நிலஸ்வான்தார்களாயிருக்கின்றனர். ஜனங்களின் வருஷக் கூட்டத்தில் புலையர் பிரதிநிதியொருவர் மேல் ஜாதியாருடன் சமானமாக உட்காரும் பாத்தியத்தை அடைந்து இருக்கிறார். புலையர்கள் கூடிய சீக்கிரம் இன்னும் முன்னேற்ற மடைவார்கள் என்பது திண்ணம். ஆனால் அவர்கள் குடியையும் மற்ற தீய வழக்கங்களையும் விடுவார்களானால் அவர்கள் இன்னும் சீக்கிரம் அபிவிருத்தியாவார்கள்.

இந்தியச் சாரணர் கைத்தொழிற் பொருட்காட்சி.

நாளிது மார்ச்சுமீ 1வ சனிக்கிழமையன்று சென்னையில் கோகலே மண்டபத்தில் சென்னை ராஜதானியில் பற்பல நகரங்களில் ஏற்பட்டுள்ள இந்தியச் சாரணர்சங்கங்களால் அமைக்கப்பட்ட கைத்தொழிற் சாமான்களுடைய பொருட் காட்சியானது மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்களால் பிரகடனம் செய்யப்பட்டது. சதுரங்கப் பலகைகள், நாணயப்பைகள், பின்னல் வேலைகள், சித்திரங்கள், தச்சுவேலைசெய்த சாமான்கள், மைபொத்தும் கடுதாசியுடன்கூடிய எழுத்துப்பலகை, பிரம்பு சாமான்கள், மூங்கிலினால் முடைந்த சாமான்கள் முதலிய பல சாமான்கள் அமைக்கப் பட்டிருந்தனவாம். மதனப்பள்ளி, ராயபுரம், கோமளேசுவரம் பேட்டை, கீழ்ப்பாக்கம், மைலாப்பூர், தேனாம்பேட்டை, ஜியார்ஜ்டவுன், சைதாப்பேட்டை, எழும்பூர், மதுரை, பங்களூர் முதலிய நகரங்களிலுள்ள சாரணர்களால் கையால் செய்யப்பட்ட சாமான்கள் எல்லாம் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்தன. எந்தெந்தச் சாரணர் சங்கத்தின் வேலைப்பாடு மிகவும் சிலாக்கியமாய் இருந்ததோ அந்தந்தச் சங்கத்திற் கென்று பல வெகுமதிகள் அளிக்கப் பெற்றன. சாமான்கள் ஒன்றையொன்று வேலைத்திறமையிலும், கெட்டிக்காரத் தனத்திலும், மிகர்த்திருந்தது என்றும், அதனால் வெகுமதியளிப்பதற்காகத் தேர்ந்தெடுப்பது சிரமமாய் விட்டதென்றும் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள் கூறுகிறார்கள். அம்மையவர்களைத் தவிர ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரும் ஸ்ரீ வி. ஜினராஜ தாஸரும் ஸ்ரீ பாரிஸ்டர் சுந்தரம் ஐயரும், சமயோசிதமாகப் பேசினார்கள். எல்லோரும் சாரணர்களின் கைப்பழக்கத்தையும் வேலைப் பாட்டையும் வியந்தார்கள். இவ்வளவு சீக்கிரத்தில் இந்தியச் சாரணர் சங்கத்தார் இவ்வளவு அழகாய் வேலைசெய்யும்படி பழகியிருக்கிறார்கள் என்பதை யறிய நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

பிரஹ்மஞான சபையும் அதன் வேலையும்.

(149 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் ஸ்தூலசரீரமானது அசுத்தமான உணவையுட்கொள்வதாலும், மதியைமயக்கும் பானங்களைப் பருகுவதாலும், ஆகாரத்தை மிதமின்றி புஜிப்பதாலும், காமக்குரோதமுதலிய இழிவான இச்சைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் இருப்பிடமாகச் செய்வதாலும், ஆரோக்கியம், பலம், சுத்தம், என்ற குணங்களோடு கூடி யிருக்காமல் ஜீவனுடைய விகாஸமுறையில் ஒரு இடையூறாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆத்ம விகாஸத்திற்கு ஸ்தூல சரீரமானது ஒரு விக்கினமா யிருக்கின்றதென்றும் அதைத்துன்புறுத்தினாலல்லாது ஜீவன் விகாஸமுறையில் மேற்செல்லான் என்றும் அதைக்குறையாய்த் தெரிந்த மத்தியகால ஜிஞ்ஞாசுகள் கூறுவதை நாம் அறிவோம். ஆனால் பிரஹ்மஞான சபையோர்களோ வென்றால் ஆகாரம், தூக்கம், விழிப்புமுதலிய ஸ்தூலசரீரப்பிரவிருத்திகளில் மிதமா யிருத்தல் வேண்டும் என்று பகவத்கீதையில் வற்புறுத்தி யிருப்பதைக் கைக்கொள்ளுகிறார்கள். மிதவாழ்வுதான் உன்னதமான சரீரப்பயிற்சிக்கு ஆதாரமா யிருக்கின்றது. ஆத்மஞான நெறியில் நிற்போனுடைய ஸ்தூலசரீரமானது அவனுடைய ஆத்மசக்தி, மனோபாவம், இச்சாநிலை, சரீரபலம், இவைகளைப்பரிபூரணமாய் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற இன்றியமையாக் கருவியாக இருக்கவேண்டும். இவ்விதமாகச் செய்வதற்கு பிரஹ்மஞானமானது சுதேசிய கல்வியைக் கருவியாய்க் கைக்கொண்டு அதன் முன்னேற்றத்தை நாடுகின்றது. அதன் முன்னேற்றமானது எப்பொழுது முடிவுபெறுமெனின், சுதேசியக் கல்வியின் முக்கியமான லக்ஷணங்களும் உயர்தர நோக்கங்களும் தேசத்தாரால் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்டு தேசத்தின் இளைஞர்களுக்கு இராஜாங்கக் கல்லூரி

களிலும் வித்யாசாலைகளிலும் ஊட்டப்படும் கல்விமுறை களில் அவைகளை அனுஷ்டித்து, இப்பொழுது வாலிபராக ளா யிருந்தபோதிலும் வருங் காலங்களில் தேசத்தை உஜ் ஜீவனம் செய்யத் தக்கவர்களாயுள்ள தற்காலத்திய மாணு க்கர்களுடைய ஜீவியத்திலும் பிரவிருத்திகளிலும அவ்வித உயர்தர லக்ஷ்யங்கள் ஊடுருவிச் சென்றால்மட்டில் அவ்வித முடிவை அடைந்ததாகும.

இவ்விதமாக வித்யாபிவிர்த்தியை முக்கியக் கருத்தா கக் கைக்கொண்டு அதை ஸ்தாபிதம் செய்வதில் முன்னேடி யாக நிற்கின்ற பிரஹ்மஞான சபையின் தலைவர்கள் அவ் வித வேலையைத் துவக்கினபிறகு ஆசார சீர்திருத்தங்களைக் கைக் கொண்டார்கள். அவர்கள ஆசாரங்களில் இருக்கும் பல குறைவுகளை எடுத்துக்காட்டி அக்குறைவுகளை நீக்கி நமமுடைய ஜனஸமூகங்களில் ஸதாசாரங்களையும நல்வழி களையும நிலை நிறுத்தினதல்லாது நமமுடைய ஜன ஸமூக ங்களில ஜனிக்கும ஜீவர்கள அவர்களுடைய விகாஸ நிலைக்கேற்ற பூரண ஆத்ம சக்திகளை அடையாகவென்று எடுததுக் காட்டினார்கள.

ஆசாரவிதிகளும் ஜீவிய நிபந்தனைகளும விகாஸமுறை யில் ஜீவர்களது முன்னேற்றத்திற்குக் காரணமாயிருக்க வேண்டுமேயல்லாது அதற்குஇடையூறா யிருக்கக்கூடாது. இவ்வித நிபந்தனைகள பலவிதமா யிருக்கின்றன. அவைகள ஜனங்களின் ஐசுவரியம அல்லது தாரித்திரியம், சௌக்கிய மாயும சந்தோஷமாயும வஸிக்கும நிலை, வித்தையைக் கற பதற்கேற்ற சௌகரியங்களோடு கூடியிருத்தல், ஜாதி, வர் ணம, மதம், பால, முதலிய வித்தியாஸங்களால வித்தியா ப்பியாஸம தடைபடுதல், விவாகம ஏற்படும் வயது, சிசும ரண சம்பவம், நிர்ப்பந்த வைதவ்யம், தேசத்தை வருங்கால ங்களில் நிர்வகிக்கவேண்டியதற்கால வாலிபர்கள் ஆரோக்கிய மான நிலைமைகளில வளர்தல, இவையெல்லாம ஜனஸமூகத் தின்நிபந்தனைகளாகும். நமது நாட்டில்ஜன்மமெடுத்திருக்கும்

ஜீவர்கள் ஏற்றபடி விகாஸம்பெறுவதற்கும் பக்குவமடைந்த ஜீவர்கள் இந்நாட்டில் ஜன்ம மெடுப்பதற்கும் ஜனஸமூக நிபந்தனைகள் இடையூருக இருக்காதபடி அவைகளை மாற்றுவது பிரஹ்மஞானியின் கடமையாகும். அவைகள் எல்லாவற்றையும்ஏற்றபடி மாற்ற பிரஹ்மஞான சபையோர் ஊக்கமானபுத்தியை அவலம்பித்து முயலுகிருர்கள். லௌகிக ஆசாரசீர்திருத்தச்சார்பார்கள் கைக்கொள்ளும்நாஸ்திகக்கொள்கைகளைத் தவிர்த்து, தார்மிகமான ஆசார சீர்திருத்தங்கள் ஆத்மஞானத்துடன் ஒத்திருக்கின்றன வென்று வற்புறுத்தா நின்றனர். கர்மம் புனர்ஜன்மம் என்ற தத்துவங்களை விவேகத்துடன் தெரிந்துகொள்ளாதவர்கள் அவைகளை ஆபாஸக்கொள்கைகளாகக் கருதுகிருர்கள். ஒவ்வொருவனும் அவனுடைய துக்கங்களை பூர்வஜன்மப்பலனுக அனுபவிப்பதால், அவனுடைய துக்கங்களைவேருெருவன் நிவர்த்திக்கத்தகாதென்றுஎண்ணுகிருர்கள்.பரோபகாரசிந்தையைக் குறுக்குகிருர்கள். அதே காரணத்தைக்கொண்டு விதியைத்தடுக்கமுடியாதென்று நினைத்து உலகத்தில் அறிவை பரவச்செய்வதிலும், வித்யையைப் புகட்டுவதிலும், ஸ்திரீகளின் நிலைமையை மேன்மைப் படுத்துவதிலும், தைன்யர்களையும் பஞ்சமர்களையும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதிலும், இடையூருக நிற்கும் தடைகளை விலக்காமலிருக்கின்றுர்கள். ஆனுல் பிரஹ்மஞான வெளிச்சத்தால் அத்தத்துவங்களின் உண்மையான தாத்பரியம் நன்ருக அறியப்படுகின்றன. உலகத்தில் உன்னதமான பரோபகாரத்திற்கும் துக்க நிவாரணத்தைக் கருதும் மேன்மையான முயற்சிக்கும் அத் தத்துவங்கள் யாதொரு விதத்திலும் இடைஞ்சல் செய்யத்தக்கன வல்லவென்றும் அறிகிருர்கள். பூர்வகர்ம லப்தமாய் நிற்கும் எவ்வித துக்கத்தையும் நிவாரணம் செய்வது நம்முடைய தர்மமாகும். அவ்விதமாக துக்க நிவாரணத்தை அடையும் மனிதன் அதை நிவர்த்தி செய்பவன் மூலமாய் அவனுடைய கருமபலத்தை அவன் ஒருக்கால் அடையத்தக்கவனு யிருந்தாலும் இருக்கலாம்.

துக்கநிவர்த்தி என்றமனுஷ்யதர்மத்தை மனிதன் எப்போது செய்யக்கடவன். கர்மபலத்தை அளிக்கும் கர்மதேவதைகள் அவர்கள் தர்மத்தை அவர்கள் செய்வதில் நம்மால் தடைப்படார்கள். இதரர்களுக்கு பூர்வகர்ம விசேஷத்தால் உண்டாகும் துக்கத்தையும் பிணியையும் ஒருவன் போக்கடிப்பதினால் பூர்வகர்மபலன் என்ற நியாயத்திற்கு விரோதமாக நடத்தலாகிய தோஷத்திற்கு ஆளாகிறேனென்று அவன் கருதவேண்டியதில்லை. பிரஹ்மஞானத்தினுடைய உபயோகம் யென்னவென்றால், ஒரு ஜாதியை சாஸ்திரீயமாய் நிர்மாணம் செய்வதெப்படி யென்று அதின் மூலமாய் அறிகிறோம். ஒவ்வொரு ஜாதியிலும் ஆத்மஞானம், விவேகாபிவிருத்தி, நற்குண நல்லொழுக்கம்,சௌந்தர்யஞானம்,ஸதாசாரம், ஒழுங்கான ராஜரீகமுறை, அர்த்தார்ஜனம் முதலியவிஷயங்களில் சீர் திருத்தங்களை ஏற்படுத்தி தோஷங்களை நிவர்த்தி செய்து அந்த ஜாதியில் உன்னதமான ஜீவர்கள் உற்பத்தியாவதற்கு ஏற்ற நிலைகளை உண்டுபண்ணி அஜ்ஜாதியை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரலாமென்று பிரஹ்மஞானத்தினால் நாம் தெரிந்து கொள்ளலாம். ஜீவன் ஈசுவரனுடைய அம்சமாயிருத்தலால் அவனுடைய விதியை அவனுடைய மதியால் வெல்லக்கூடும். அதுபோலவே தேசஜாதியோர்களும் அவர்களுடைய முன்னேற்றத்தை அவர்களுடைய சுயமுயற்சிகளால் ஸாதிக்கக்கூடும்.

பிரஹ்மஞானத்தால் கலைகளின் அந்தரங்க தத்துவங்கள் நன்கு அறியப்படுகின்றன. சித்திரம் வரைதல், ஸங்கீதம், நாடகம், காவியம், முதலிய கலைகள் ஆத்மா ஸத்தியமானது என்றும் ஸௌந்தர்யம் ஆனந்தம் முதலிய குணங்களோடு கூடியதென்றும் வெளிப்படையாகக் காட்டுகின்றன. இவ்வழிகளால் பல கலைகளின் உட்கருத்துக்களையும் பிரயோஜனங்களையும் எடுத்துக் காட்டும் அபிப்பிராயங்களைக் கைக்கொண்டு நவீனமாக கலைஞர் குழுக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

தவிரவும், வணிகம், கைத்தொழில் முதலியவைகளின் தற்கால நிலைமையைச் சீர்படுத்துவதும் இப்பொழுது அவைகளின் ஆதாரமாகிய போட்டியை மாற்றுவதும், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஐரோப்பா அமரிக்கா தேசங்களிலுள்ள போராட்டம், போட்டி, துவேஷம், முதலியவைகளை அகற்றி, பிரஹ்மஞானத்தால் வற்புறுத்தப்படுகிற ஐக்கியம், சகோதரபாவம் இவைகளையே அவைகளுக்கு அடிப்படையாகச் செய்வதும், பிரஹ்மஞான சபையின் ஒரு பயனாகும். பிரகிருத யுத்த நிலைமையால் முன்னுக்கு கொண்டு வரப்பட்ட மாறுதல்களினால் இவ்விதமான சீர் திருத்தமானது அதி சீக்கிரமாய் உண்டாகக் கூடியதா யிருக்கின்றது.

(தொடரும்.)

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

பத்திரிகை விமர்சம்.

ஸிலோன் எகானமிஸ்டு என்ற பெயரிய ஒரு ஆங்கில மாதாந்தரப் பத்திரிகை எமது பார்வைக்கு அனுப்பப்பட்டுளது. 1919 ஹூ பிப்பிரவரிமீ முதல் தான் அப்பத்திரிகையானது துவக்கப்படுகின்றது. விவசாயம், கைத்தொழில், இயந்திரத்தொழில், வியாபாரம் முதலிய விஷயங்களைப் பராமர்சித்து தேசத்தின் பொருள் அபிவிருத்தியை நாடுவதே முதற் கொள்கையாகக் கொண்டு இப்பத்திரிகை துவக்கப்பட்டுளது. யாழ்ப்பாணமானது பேருக்குமட்டும் வேறு நாடாக இருப்பினும், அதுவும் சிலோனும் உண்மையில் பெரும்பாலும் நம்நாடென்றே சொல்லத்தகும். இப்பத்திரிகையானது நன்கு அபிவிருத்தியாகி நாட்டின் பொருளபிவிருத்திக்கு ஏதுவாக வேணடும் என்பது எமது பிரார்த்தனை. இதன் வருடச்சந்தா ரூ 3—0—0

ஸர். ரவீந்திரநாத டாகூர் உபந்நியாசத்தின் சில குறிப்புகள்.

இந்தியாவில் தற்காலத்தில் கிளர்ச்சி யுண்டாயிருக்கின்றது. புதிதுபுதிதாக வித்யாசாலைகள், சபைகள், ஸமாஜங்கள் கிளம்பி இருக்கின்றன. இந்தியாவானது ஜாக்கிரதாவஸ்தையிலிருக்கின்றது. மிகவும் சுறுசுறுப்பாயிருக்கின்றது.

***

நாம் எப்போதும் பிறரையே குறை கூறுகிறோம். நம்மைச் சுற்றியிருக்கும் சந்தர்ப்பங்களின் பேரில் குற்றம் சுமத்துகிறோம், நம்மையாளும் அரசாங்கத்தார் தவறிவிட்டார்கள் என்கிறோம். ஒரு சிறிதாவது நம்மிடம் ஏதாவது குற்றம் உண்டோ என்று யோசிக்கிறதில்லை. நமக்கு உண்மையான வித்தையைக் கொடுக்கவேண்டியது அதிகாரிகள் என்றும் நமக்கு அதைக் கொடுக்காதது அவர் பேரில் பெரும் குறை என்றும் நினைக்கிறோம். வித்தையைப் பெறுவதில் குறை கூறுவதைத் தவிர நமக்கு ஒரு பொறுப்பும் இல்லையென்றும் எண்ணுகிறோம்.

***

முழங்கால் மட்டும் உள்ள ஜலத்தில் நின்ற ஒருவன் வெகு ஆழத்திற்குப் போய் விட்டேன் என்று தவறுதலாய் எண்ணிக்கொண்டு தத்தளித்துத் தண்ணீரில் அமிழ்ந்து உயிரை இழந்தான் என்று ஒரு கதை யுண்டு. அம்மாதிரியே நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, பிறர் உதவியில்லாமல், அதிலும் அரசாட்சியார் உதவி யில்லாமல், வித்தையை அடைய முடியாது என்று பிசகாக எண்ணி ஒன்றும் செய்யாமல் தத்தளித்து வீணே கஷ்டப்படுகிறோம்.

***

மேல் நாட்டில் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜு, முதலிய சர்வகலாசாலைகளைப் பார்க்கிறோம். உடனே அவைகளைப் போல் இங்கேயும் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும் என்று ஆசைப படுகிறோம். உடனே ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையின் அமைப்பில ஒருபாகம், இன்னொரு சர்வகலாசாலையின அமைப்பில் மற்றொரு பாகம், இவ்விதமாக பற்பல பாகங்களாய்ச் சேர்தது சர்வகலாசாலை ஒன்றை இங்கே ஸ்தாபிக்கிறோம். அது சரியாக நடக்கவில்லையென்று வருத்தப படுகிறோம். அது சரியாக நடக்கவில்லை யென்பது என்ன ஆச்சரியம?

***

சர்வகலாசாலை யென்பது ஒரு உயிரும் பல அங்கங்களும் உள்ள ஓர் ஜீவனைப் போன்றது. பத்து மனிதர்களுடைய பற்பல உறுப்புகளைச் சேர்தது உயிருள்ள மனிதனையுண்டாக்க முடியுமா? ஒரு உயிருள்ள மனிதனுக்குக் கொஞ்சம சிதைவு ஏறபட்டால் அதற்குச் சிகித்ஸை செய்வதற்காக வேறு ஒரு மனிதனுடைய தோலை எடுத்து ஒட்டினால் சிதைவுண்ட மனிதன குணமாகிறான எனபதுண்டு. ஆனால் முழுவதும் புதிதாக ஒருமனிதனையே உண்டாக்க முடியுமா? எனக்கு ஒரு வயதுவந்த குமாரன் இருந்தால சௌகரியமாக விருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால் திடீரென்று அப்படி பெரிய புததிரனை சிருஷ்டித்தல எங்ஙனம்?

***

இம்மாதிரியே வங்காளத்தில் சீக்கிர காலத்தில அநேகம் கலாசாலைகளை ஸ்தாபிக்கவேண்டும என்று எண்ணம கொண்டு நாஷனல் கவுன்சில ஆவ் எடுகேஷன என்ற தேசீய விதயா பீடம் எனறுஒன்று ஸ்தாபித்தார்கள். "ஐயா சிறுகச்சிறுகச்செல்வோம்" என்று சொன்னால, "இல்லை ஒரே தடவையாகப்பெருமுயற்சி செய்தால்தான் ஜனங்களுடைய உற்சாகம் கிளம்பும, மேலும் ஜனங்களுடைய மனதையும கவரமுடியும்" என்றார்கள. கடைசில என்ன ஆச்சுது? அநேகம் கலாசாலைகள் ஸ்தாபித்ததும உண்மை தான. ஜன

ங்களுடைய மனதையும் கவர்ந்ததும் வாஸ்தவம் தான். ஒன்று மாத்திரம் அஸ்திவாரத்தில் இல்லை. அதாவது உண்மையாகிய உயிர் இல்லை. மரம் பட்டுப்போய் விட்டது.

***

ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிப்பதும் போதாது. அதை நம்முடைய சொந்த நிர்வாகத்தில் வைத்துப்பரிபாலிப்பதும் மட்டும் போதாது. உயிர் இருந்தால் ஒழிய அந்த ஸர்வகலாசாலை சிறிதுகாலம்கூட நிலைக்காது. நூற்றைம்பது வருஷமாக ஆங்கிலப்பள்ளிக் கூடங்களுக்குப் போய் வருகிறோம். என்ன லாபமடைந்தோம்! இன்னும் போய்க் கொண்டுதான் வருகிறோம். பூர்வஸ்திதிக்குக் குறைச்சலில்லை.

***

ஜீவனுக்கு அடையாளம் உயிர். உயிருள்ள வஸ்துக்கள் எல்லாம் வெளியிலிருந்து பெற்றுக்கொள்வது மட்டுமில்லை. தன்னிடமிருந்து வெளியில் கொடுக்கவேண்டும். முன் காலத்தில் நாம் உயிருடன் இருந்தோம். ஒவ்வொரு சாஸ்திரத்திலும் ஆராய்ச்சிசெய்து எவ்வளவு உண்மைகளை வெளியிட்டிருக்கிறோம்! முற்காலத்து வைத்திய சாஸ்திரிகளுடைய பெருமையைப் பாருங்கள், அவர்கள் லோகோபகாரார்த்தமாக எவ்வளவு உண்மைகளை வெளியிட்டார்கள். இப்போது வைத்தியர்கள் இல்லையா? அவர்கள் மேல்நாட்டுப் புஸ்தகங்களிலிருந்து படித்ததைக் கிளிப்பிள்ளைகள் போல் தவறாது ஒப்பிக்கிறார்கள். அவர்கள் மனதின் ஞாபகசக்தி அபாரம்தான். ஆனால் அதனுடைய சிருஷ்டிக்கும் சக்தியெங்கே போயிற்று?

***

மேல் நாட்டில் சர்வகலாசாலை யென்றால் வாஸ்தவத்தில் எது? குறிப்பிட்ட இடத்திலிருக்கும் கட்டடம், உபாத்திமார், மாணாக்கர்கள், முதலிய மட்டுமா? இல்லை. சர்வ

கலாசாலைக்கு இரண்டு சரீரங்கள் உண்டு மேற்கூறியவை ஒன்று. அவைகளுக்கும் பெரிய சரீரம், வேறுண்டு. அதாவது பெரிய ஜனசமூகமே சர்வகலாசாலையின் சரீரம்என்று சொல்லவேண்டும். தேங்காய் என்பது உள்ளிருக்கும் பருப்பு மட்டுமா அல்லது அதனுடைய ஓடு, நார், உள்படக்கூடிய முழுக்காயுமா? இரண்டிற்கும் அந்தரங்கமான சம்பந்தம் உண்டு. அம்மாதிரியே ஜனசமூகத்திற்கும் சர்வகலாசாலைக்கும் அவ்வித அந்தரங்கமான சம்பந்தமானது மேல்நாட்டில் இருக்கின்றது. இங்கே அப்படி இருக்கின்றதா?

***

சர்வகலாசாலைக்கு வேண்டிய அங்கங்கள் அதாவது கட்டடங்கள் நாற்காலி மேஜை இவையெல்லாம் நம்முடைய சர்வகலாசாலையி லிருக்கின்றன. ஆனால் அங்குள்ள உயிரானது இங்கு இல்லை. உபாத்திமாருக்கும் மாணாக்கருக்கும் இடையே ஒரு பெரிய சுவர் இருக்கின்றது—காகிதக் குறிப்புப்புஸ்தகங்களால் ஆகியசுவர். மாணாக்கனைத்தொட்டால் உபாத்தியார் தீண்டல் படுவார்போலும்! மாணாக்கருக்கு உண்மையான ஆகாரம் இன்றி அவர்கள் பசிதபிக்கிறார்கள்.

***

நாம் நம்முடைய தீவிரமான முயற்சியினால் ஆவலுடன் இதரர்கள் பேணும்படியான எதையாவது உண்டாக்கிக் கொடுத்தால்தான் நாம் உயிருள்ளவர் ஆவோம். மற்றவர் கொடுப்பதை நாம் ஏற்றுக்கொள்வதாக யிருந்தால் உயிருள்ளவர் என்று எங்ஙனம் கூறுவது?

***

சர்க்கார் உத்தியோகங்களில் குமாஸ்தாக்களாக அமரும்படியான பெரிய பாக்கியத்தைக் கொடுக்கும் நமது தற்காலக் கலாசாலைகளைவிட்டு சரியான பள்ளிக்கூடங்களை

ஸ்தாபிக்க நமக்கு தைரியமில்லை. இந்த குமாஸ்தாவேலை யில்லாமல் போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் நமக்கு ஏற்படுகிறது! சரியான பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதில் நமக்கு உண்மையான நம்பிக்கை வரவில்லை.

***

முற்காலத்தில் அயர்லாந்தில் ஐரிஷ்பாஷையினாலேயே கற்பிக்கப்பட்ட ஒருஸர்வ கலாசாலை யிருந்தது. அது மிகவும் சிறப்புற்று விளங்கியது. அப்பால் டேன்ஸ் ஜாதியார் வந்து அயர்லாந்தை ஜயிததார்கள். அதுமுதல் ஐரிஷ்பாஷை தொலைந்தது. எலிஜபெத் ராணிகாலததில் ஐரிஷ் பாஷை பேசுவதுகூட நின்றுவிட்டது. ஆங்கிலத்தையே பள்ளிக்கூடத்தில் கற்பிக்கலானார்கள். என்னபயனுச்சுது? நிஷ்பிரயோஜனமே. அயர்லாந்துக்கும் இந்தியாவுக்கும் உவமை நன்றாய் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களுடைய மனதானது உண்மையாக கல்விச்சாலைகளில் இல்லை.

***

அதிக சாமர்த்தியமுள்ள இஞ்சினீர்களைக் கொண்டு வெகு அழகான வாய்க்கால்களை வெட்டிக் கட்டியாய் விட்டது வாஸ்தவம். ஒவ்வொருவரும் கட்டடத்தின் அழகையும் இஞ்சினீருடைய சாமர்ததியத்தையும் மெச்சுகிறார்கள். ஆனால் ஒரே ஒரு குறைதான். வாய்க்காலில் தண்ணீர் தான் பாயவில்லை. இந்த வாய்க்காலை நம்பி புராதனமான வாய்க்கால்களையோ மூடியாய்விட்டது. இரண்டும் கெட்டு தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டு விட்டதுதான் லாபம்.

***

அன்னிய பாஷையான ஆங்கிலத்தில் கற்பித்தால் என்னமாக வித்தை அபிவிருத்தியாகும்? வார்த்தைகளைக் கற்பதா, வார்த்தைகளுடைய பொருளாகிய விஷயங்களைக்

கற்பதா? இளம்பிராயத்தில் வார்த்தைகளைக் கற்பதிலேயே பொழுது போக்குவதைப்போல் பைத்தியம் வேறு என்ன விருக்கிறது?

***

எல்லாம் தலைகீழ்ப்பாடமாக இருக்கிறது. முதலில் தண்ணீர் வரும் அப்பால் அல்லவா மீன் வரவேண்டும்? நாம் அனுஷ்டிக்கும் முறையானது இயற்கைக்கு விரோதமாக இருக்கின்றது. முற்காலத்தில் ஆசாரியன் தபசு செய்து தன்னை ஜயித்து, ஆத்மவானானர். அப்பால் அவர் தபஸ் செய்யும் ஆசிரமம் அல்லது ஆரண்யத்தை நாடி மாணாக்கர்கள் சென்றார்கள். தக்ஷசைலம், நாளந்தா முதலிய முற்காலத்திய சர்வகலாசாலைகளைப்பற்றி விசாரித்தால் முதலில் ஆத்மவானான ஆசாரியனிருந்ததாகவும் அவனிடம் மாணாக்கன் சென்றதாகவும் ஏற்படுகிறது. இப்போதோ மாணாக்கனைத் தேடி ஆசாரியன் செல்லுகிறான்.

***

சக்தியானது மத்தியிலிருந்து வெளியே பரவவேண்டியது. இப்போது வெளியிலிருந்து சக்தியானது உள்ளே நுழைய முயலுகிறது. முற்கூறியபடி சக்தி புறப்பட்டால் தான் உயிரானது விளைக்கும்.

***

பிரயாகையில் ஒரு மாணாக்கனைக்கண்டு நதியென்றால் என்ன என்று கேட்டேன். அவன் ஒருசிறு தப்பிதமுமில்லாமல் நதியென்றால்என்னவென்று சொன்னான். உனக்குத்தெரிந்த ஒரு நதியைச் சொல் என்றேன். நான் ஒரு நதியையும் பார்த்ததில்லையென்று சொன்னான். இரண்டு மகாநதிகளின் சங்கமத்தில் இருக்கும் அப்பையன் நதியைப்பார்த்ததில்லை என்றான். நதி என்ற வார்த்தையைக் கற்றுக்கொண்டானே

யொழிய கதி யென்ற பொருளை அறியவில்லை. இம்மாதிரி தானிருக்கிறது இந்தியாவில் படிப்பு!

***

நம்முடைய தேசமானது நாகரீக மற்றது என்று சிலர் சொல்லுவதைக் கேட்டு அவ்வாறே நாம பிதற்றிக் கொண் டிருக்கிறோம். அப்பால் வேறு சிலர் நம் நாடு மிகவும் நாக ரீகமுற்றது என்று சொல்வதைக் கேட்டு நாம் முன்னை விட அதிகமாகப் பிதற்றுகிறோம். இரண்டும் மதியீனமே! முன்காலத்தில் நம் முன்னோர்கள் மிகவும் பெரியவர் கள் என்று சொல்லுவதால் என்ன பிரயோஜனம்? அது போதுமா? நம்முடைய பழைய காலத்திய பெருமையை நாமே அறிந்து அதைப்போல் இக்காலத்திலும் இருக்க முயலவேண்டும்.

***

தாய்ப்பாஷையிலே தான் வித்தையைப் புகட்டவேண் டும். மாணுக்கர்களை நிர்ப்பந்தமின்றி யதேச்சையாய் இரு க்க இடம் கொடுக்கவேண்டும். அவர்களுடைய விவேகத் தைமட்டும் பயிற்றுவது போதாது. விவேகம் எவ்வளவு மு க்கியமோ அவ்வாறே அவர்களுடைய மனத்தின் இதரபாக ங்களின் அபிவிருத்தியையும் நாடவேண்டும். ஸங்கீதம், கலை, சிற்பம் முதலியவைகளையும் அவர்களுக்குக்கற்பித்தல் இன் றியமையாதது. ஒரு பாகத்தை மட்டும் விருத்தி செய்தால் சரியாகாது. எல்லாபாகத்தையும் ஒருங்கே விருத்தி செய் தால் தான் நன்மையாகும்.

ஸபாபதி

சிறுவர் பக்கம்.

அன்புள்ள ஸ்வர்ண மணிகளே,

"முன் ஒரு காலத்தில் தரித்திரரான ஒரு பிராம்மணர் யாகத்திற்காக ஆசையினால் தனத்தை விரும்பி உக்கிரமான தவத்தைச் செய்தார். தேவர்களைப் பூஜித்தார். பூஜித்தும் தனத்தை யடையவில்லை. பிறகு அவர் மேகதேவதையாகிய குண்டதாரன் தனக்கு தனம் கொடுப்பாரென்று எண்ணி அவரிடத்தில் பக்தியைச் செலுத்தினார். பிறகு அத்தேவனை தூபங்களாலும் கந்தங்களாலும் பூஜித்தார். பூஜையினால் குண்டதாரன் சந்தோஷமடைந்து சில தர்ம உபதேசத்தைச் சொல்லி மறைந்தார். பிறகு அந்தப்பிராஹ்மணர் குண்டதாரன் சொன்ன தர்ம உபதேசத்தையும் அவரையும் தியானித்துக்கொண்டு நித்திரை செய்கையில் ஒரு ஸ்வப்பனம் கண்டார். அந்த ஸ்வப்பனத்தில் மணிபத்திரன் என்ற தெய்வலோகாதிபதி அவரவர்கள் கர்மத்துக்கேற்றபடி சீரையும் சிறப்பையும் கொடுத்துக் கொண்டும், அவைகளை பிடுங்கிக் கொண்டும் இருப்பதைக் கண்டார். கண்டதும் குண்டதாரன் அந்ததேவதையின் காலில் விழுந்தார். மணிபத்ரன் "குண்டதாரா! நீ எதை விரும்புகிறாய்?" என்று கேட்டார். குண்டதாரன் "இந்த பிராஹ்மணர் என்னுடைய பக்தர், இவருக்கு சிறிது சுகத்தைத்தரவேண்டும்" என்று சொன்னார். உடனே மணிபத்ரன் இந்த பிராஹ்மணருக்கு தனத்தைக் கொடுக்கிறேன் என்று சொன்னார். குண்டதாரன் மணிபத்ரனை நோக்கி "செல்வம் நிலையில்லாதது. அவருக்குத் தனத்தை நான் விரும்பவில்லை. பின்னை யென்னவென்றால், இவர் எப்பொழுதும் தர்மத்தையே செய்யவிரும்பவேண்டும். இவருடையபுத்தி தர்மத்தில் மகிழவேண்டும்." என்று சொன்னார். மணிபத்ரன் அப்படியே வரமளித்தார். அதற்குள் பிராஹ்மணர் ஸ்வப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டார். அவர் தர்மத்தால் ஜீவிப்பதற்கு வனத்தை அடைந்தார். நெடுங்காலம் தர்மத்தில் நம்பிக்கையுடையவராய் தவஞ்செய்து

வந்தார். அந்த பிராஹ்மணர் தர்மத்தால் உண்டான சக்தியி னால் நினைத்த பொருள்களை அடைந்து மேலான கதியை யும் அடைந்தார்.

இந்தக் கதை மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் உள்ளது. அதனால் என்ன தெரியவருகிறது? தர்மம் செய் யும் பொருட்டு தனத்திற்காக தவம்செய்தவர் மேலான கதியையடைந்தாரல்லவா? பொதுவாக தர்மம் செய்யவி ரும்புகிறவர்களுக்கு கிடைக்கக்கூடிய பலனைப்பற்றிச்சொல் லவும் வேண்டுமா? இதை முன்னிட்டே ஔவையார், "அறம் செயவிரும்பு" என்று நீங்கள் படித்த ஆத்திச் சூடியில் சொல்லியிருக்கிறார்.

தேவர்கள் நமக்குச்செய்த நன்மைகளுக்கு பிரதி உப காரமாக நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியவை நல்ல எண்ணங்கள், நல்லசொற்கள், நல்ல செயல்கள் அல்லவா? முதலாவது நல்ல எண்ணங்கள் அவசியம். ஏனெனில் நல்ல எண்ணங்களிலிருந்து தான் நல்ல சொற்களும், நல்ல செயல்களும் உண்டாகின்றன.

நல்ல எண்ணங்கள் அநேகவிதம். முக்கியமாக கவனிக்க த்தக்கது தர்மசிந்தனையோடுகூடியிருத்தல் அதாவது தர் மம் செய்ய இச்சைப்படுதல். உங்களைக்காட்டிலும் எளிய வர்களாகவும், வறுமையுள்ளவர்களாகவும் இருப்போருக்கு உதவிசெய்ய விரும்புதல். ஒருவேளை தருமம் செய்யமுடியா விட்டாலும் தர்மம் செய்ய சமயம் எப்பொழுது நமக்கு வரு மென்று எதிர் பார்த்து இருக்கவேண்டும். அப்படியிரு ந்தால் உங்களுடைய மனதில் கெட்ட எண்ணங்கள் உண் டாகமாட்டா. நீங்கள் படிக்கும் காலத்தில் உங்கள் படிப்பி லும், விளையாடும் காலத்தில் விளையாட்டிலும் உங்களு டைய மனது பற்றிக்கொண்டிருக்கும். சும்மா இருக்கும் காலத்தில் கெட்டஎண்ணங்கள் மனதில் வந்து சோதபடி காப்பதற்கு சாதனமாக இருப்பது தர்ம சிந்தனையுடன் இருத்தலாம்.

சொர்னவேலன்.

புத்தக விமர்சம்.

ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்யம் :—ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீசுவரர் அவர்களால் இயற்றப்பட்டது. 28½ பக்கங் கொண்டது, விலை ரூ 1—4—0

இது மிகவும் உத்கிருஷ்டமான விஷயத்தைப்பற்றிய நூல். வேதாந்தசாஸ்திரங்களின் ரஹஸ்யங்களையும் யோக சாஸ்திரத்தின் நுட்பங்களையும் இதில் வெளியிடப்பட்டிருக்கிறது. பிராணாயாமம் செய்யும் முறை, அதனாலாகும் பயன், முதலிய யோகவிஷயங்களைப் பற்றி வியக்தமாகக் கூறுவது சாதாரணமாக வழக்கம் இல்லை. ஏனென்றால் குருக்களுடைய சன்னிதியில், அவர்களுடைய உபதேசத்தின் பேரிலும், அனுமதியின் பேரிலும் தான் அவ்வப்பியாசங்களைச் செய்ய முயலவேண்டுமே என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அமெரிக்காவில் ஆங்கிலத்தில் யோகாப்பியாசங்களைப்பற்றி எழுதியுள்ள புஸ்தகங்களை வைத்துக்கொண்டு குரு சமீபத்தில் இல்லாமல், தாமாகவே பிராணாயாமம் அப்பியாசித்த பலர் புத்தி தடுமாறி உன்மத்தர்களாய்த் திரிகிறார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால் ஆசிரியர் ஏதோ சில விதிகளைக் கூறியிருக்கிறாரே யென்று படிப்போர்கள் தாமாகவே அப்பியாசம்செய்ய முயலாமல் ஆசிரியரைப்போன்ற உண்மைப் பெரியவர்களை அடைந்த பிறகே யோகத்தை அப்பியாசிக்க எத்தனிப்பார்கள் என்று நம்புகிறோம். அப்பியாசம் செய்வதற்கு முன், அது சம்மந்தமாயும், வேதாந்த விஷயமாயும், ஞானத்தையடையவேண்டுமானால், இப்புத்தகத்தைப்போன்ற வேறு ஒன்று கிடைத்தலரிது. குறைந்த இடத்தில் நிறைந்த பொருளை இப்புத்தகம் கொண்டிருக்கிறது. இப்புத்தகத்தை ஜிஜ்ஞாஸுக்களனைவரும் பெற்று படித்து கிருதார்த்தர்களாவார்களாக.

இந்தியாவும் சுயஆட்சியும்:— கணேஷ் கம்பெனி. டாக்டர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுதிய நூன் முகத்துடன் கூடியது. மொத்தம் 309 பக்கங்கொண்டது விலை. ரூ 1—8—0.

எமக்கு இவ்வழகிய புத்தகத்தை அனுப்பிய கணேஷ்கம்பெனியாருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறோம். புத்தகமோ நல்ல தாளில் அழகாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. ஆசிரியர் பெயரைப் புத்தகத்தில் தெரிவிக்காதது ஏனோ தெரியவில்லை. மிகவும் லளிதமாக, யாவரும் கூறிய விஷயத்தை எளிதில் அறியும்படி, செவ்விய நடையில் எழுதியுள்ள இப்புத்தகத்தைப் படிப்பதே ஆனந்தமாக யிருக்கின்றது.

இந்தியாவானது சுயஆட்சி பெறவேண்டும் என்பது ஒவ்வொரு இந்தியனுடைய கோரிக்கை யென்பதில் ஓரளவு ஐயமும்

இல்லை. சிறுகச்சிறுக அதைப் பெறவேண்டுமென்பது அரசாட்சியர்
ருடைய துணிபு. எவ்வளவு சீக்கிரம் அவ்வாட்சியைப் பெறலாம் என்
பது இந்தியர் முயற்சியைப் பொருத்தது. எவ்வளவு சீக்கிரம் இந்திய
மக்கள் தமது முன்காலத்திய பெருமையையும், தற்காலத்திய சிறுமை
யையும், அடையவேண்டிய நிலைமையின் மேன்மையையும் அறிவார்
களோ, அறிந்து அவ்வுயர் நிலையை அடைதற்கு வேண்டிய முயற்சி
யையும் கிளர்ச்சியையும் செய்வார்களோ, அவ்வளவு சீக்கிரத்தில் சுய
ஆட்சிகைக்கெட்டும். ஆகையால் யாவரும் மேற்கூறிய பெருமையை
யும் சிறுமையையும், மேன்மையையும் நன்கறிய வேண்டியது அவசியம்
என்று யாவரும் எளிதில் பெறக்கூடிய விலையில், யாவரும் அறியக்
கூடிய நடையில், வெளியிட்டிருப்பதே கணேஷ் கம்பெனியாரின்
கீர்த்தி.

நம் ராஜதானியின் மூதறிவாளரான டாக்டர் சுப்பிரமணிய ஐயர்
அவர்கள் எழுதியுள்ள முன்முகமானது இப்புத்தகத்தை இன்னும்
அதிகச்சிறப்புள்ளதாகச் செய்கின்றது. இந்தியா ஏன் தன் பிறப்புரி
மையான சுயாட்சியைப் பெறவேண்டுமென்று விசாரிக்கையில்
நமது தபோதனர் கூறுகின்றனர். அதன் பெருமையை யாவரும்
நன்குணருவாராக. 'இதரதேச மகாஜனங்களைப்போல் நாமும்
சிறப்பாய் வாழவேண்டுமென்பதை மட்டும் கருதி, நமது பிறப்புரி
மையை யளிக்கவேண்டுமென நாம் கேட்கவில்லை. மனிதகோடி
களில் ஒவ்வொரு பிரிவினரும் நாகரீகத்திற் சிறந்து தங்களுக்கு
இயற்கையாயுள்ள குணானுபவங்களுக்கேற்ற உயர்பதவியடைய
வேண்டுமென்பது உரிமையும் கடமையும் ஈசுவரசங்கற்பமுமாம்.
இதையே வெகுவாக நாம் மதித்து நமது பிறப்புரிமையை நமக்களி
க்கவேண்டுமென்று கோருகிறோமே யன்றி வேறல்ல ;

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வர்த்தகர்களாய் வந்தது முதல்
சிறுகச்சிறுக நாட்டைச்சம்பாதித்ததும், அப்பால் கம்பெனியாரிடமி
ருந்து, மகாராணியார் ஆட்சியை ஏற்றுக்கொண்டதும், மகாராணி
யாரும் அவர்களது திருக்குமாரரான எட்வார்டு சக்ரவர்த்தியும் நமது
தற்கால சக்ரவர்த்தியான ஜார்ஜ் மன்னர்பிரானும் கொடுத்திருக்
கும்வாக்குதானங்களும், கடைசியாய்ச்சென்ற 917வரு ஆகஸ்டு
20உ பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தியாவின் உயாலக்ஷ்யத்தைப்பற்
றிக்கூறிய அறிக்கையும், இந்தியாமந்திரியும் ராஜப்பிரதிநிதியும் ராஜீ
யசீர்திருத்த விஷயமாய்ச் செய்துள்ள திட்டமும், அத்திட்டம் போ
தாதென்று ஜனங்களின் மகாசபைகளான காங்கிரஸ் முஸ்லீம் லீக்
இவைகளின் தீர்மானங்களும், அத்தீர்மானங்களின் காரணங்களும்
பிறவும் இப்புத்தகத்தில் நன்கு எழுதப்பட்டுள்ளன. இப்புத்தக
மானது நாட்டின் க்ஷேமத்தைக்கோரும் ஒவ்வொரு தமிழனிடமும்
முக்கியமாய் ஒவ்வொரு தமிழ்ப் புத்தகசாலையிலும், அவசியம் இருக்க
வேண்டுமென்று திண்ணமாய்க் கூறுவோம்.

இப்புத்தகத்தின் முன்னுரையை ஒரு துண்டுப் புத்தகமாக
வெளியிட்டால் இந்தியாவின் புராதன மேம்பாட்டை நன்கறிய
விரும்பும் இந்திய மக்கள் மிகவும் சிலாகிப்பார்கள் என்று எண்ணு
கிறோம்.

அமிர்தார்ணவ லேகியம்.

இந்த லேகியம் ரத்தத்தைசுத்தி செய்து விருத்தியாக்கி, நரப்புஸ்தானங்களை எல்லாம் பலப்படுத்தி, தேகச்சூடு, பித்தவாயு, கைகால் கண் எரிச்சல், இவைகளைச் சமனஞ்செய்து, மூளையைக் குளிரப்பண்ணி, தேகபலத்தையும் மேனியையும் உண்டாக்குகின்றது. மேலும் இம்மருந்து நாள்பட்ட க்ஷயம், கிராணி, நீடித்த தலைநோய், பார்புலெவி முதலிய வியாதிகளையும் கண்டிக்கின்றது. எவ்வித பத்தியமும் கிடையாது.

20 தோலா கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2—0—0

எங்கள் கியாட்லாக் இனமாய் அனுப்படும்.

இனிமையானது! பரிமளமிகுந்தது!

மணி ஆயில்.

முட்டர்லதர்த வருஷகாலமாய் விற்டனையாகி வருகிறது

இந்தக் கூந்தல் தைலம் சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. அலங்காரத்துக்கு யோக்கியமான மனோகரமான சுகந்தமுள்ளது. சிரசில் உபயோகித்து வந்தால் ரோமங்களை உதிராமற் றடுத்து நீண்டு அடர்த்தியாய் வளரும்படி செய்கிறது. தற்காலம் வெளி வந்துலாவும் தைலங்களைப்போல் கருதிவிடக்கூடாது. ஒரு தடவையாவது வாங்கி உபயோகித்து உண்மையை அறியுங்கள். சிரசுக்குத் தடவுவதனால் மூளைக்கு குளிர்ச்சியை யுண்டுபண்ணக்கூடியது இது ஒன்றுதான். புட்டி 1 க்கு ரூ 1. ஐந்து புட்டி ஒரு தடவையில் வாங்கினால் விலை ரூ 4. வி. பி. செலவு பிரத்தியேகம். இன்னும் விபரம் வேண்டுவோர் எங்கள் கியாடலாக்குக்கு எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45-மேலகோபுரவீதி

மதுரை

புராதன கிரேக்க தத்வ சாஸ்திரிகளில்

சிறந்தவர் யார்?

ஸாக்ரடீஸ்

அவர் ஜீவிய சரிதத்தை யாராவது

தமிழில் எழுதியிருக்கிறாரா?

மதனப்பள்ளியில் புரொபஸராயிருக்கும்

ஆர். ரெங்காச்சாரியார் எம். ஏ.,

அவர்கள் மிகவும் அழகிய செந்தமிழ் நடையில்
ஒரு சிறந்த சரித்திரம் எழுதியிருக்கிறார்.
அதில் ஸாக்ரடீஸ் பிரகடனம் செய்த புதிய
முறையையும் அவரது கொள்கைகளை
யும் நன்கு கூறியிருக்கிறார்.

ஸாக்ரடீஸ் விலை. 0 12 0

ஸ்ரீ பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை.